**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திருமதி S. மும்தாஜ், B.Sc., B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ஆம் நாள் வியாழக்கிழமை**

<u>மேல்முறையீட்டு வழக்குஎண்.21/2024</u>

<u>CNR NO.TNMY06-001656-2024</u>

வாசுகி ...மேல்முறையீட்டாளர் /மனுதாரர்/வாதி

/ எதிர்/

வெற்றிவேல் ....எதிர்மேல்முறையீட்டாளர்/ எதிர்மனுதாரர்/பிரதிவாதி.

இந்த மேல்முறையீட்டு வழக்கானது சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.200/2008 ல் இடைநிலை மனு எண்.997/2019 ல் 27.04.2022 அன்று வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இடையில்.–</u>**

வாசுகி ...மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. வெற்றிவேல்
2. தவமணி (இறந்தார்)

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மேல்முறையீட்டு வழக்கானது 11.03.2026 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்து மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:03 +0530

கே. மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டார் தரப்பில் வழக்கறிஞர் திரு. இ. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலினையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

இந்த மேல்முறையீட்டு வழக்கானது சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.200/2008 ல் இடைநிலை மனு எண்.997/2019 ல் 27.04.2022 அன்று வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு சொத்துக்களில் மனுதாரர்/வாதிக்கு சேர வேண்டிய (1/3 + 1/6 = 1/2) 1/2 பாகத்தை நள இளப்பம் சரிகட்டி பிரித்து ஒருக்குவதற்கு சீர்காழி வட்ட சார்–ஆயவாளர் (நில அளவை) துணையுடன் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்தும், மேற்படி சர்வேயர் மற்றும் வழக்கறிஞர்/ஆணையர் அறிக்கை பிரகாரம் வாதிக்கு சேர வேண்டிய தாவா சொத்துக்களில் 1/2 பாகத்திற்கான இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கியும், செலவுத் தொகை கோரியும் இறுதி நிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இறுதி நிலை தீர்ப்பாணை மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் கிடைக்கக்கூடியது என்று விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் கிடைக்கக்கூடியது என்று 14.10.2011 அன்று பாகப்பிரிவினைக்காக முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு மனுதாரர்/வாதியின் தாயார் 2ம் பிரதிவாதி 01.05.2016 அன்று இறந்துவிட்டார். எனவே இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு சேர வேண்டிய 1/3 பாகத்தை மனுதாரருக்கும், முதல் பிரதிவாதிக்கும் சரிபாதியாக 1/6 பாகம் கிடைக்கக்கூடியது. எனவே வாதிக்கு அவரது 1/3 பாகம் மற்றும் 2ம் பிரதிவாதியின் பாகத்தில் 1/6 பாகம் சேர்த்து ஆக கூடுதல் வழக்கு சொத்தில் 1/2

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:08 +0530

பாகம் கிடைக்கக்கூடியது என்பதால் வாதிக்கு சேர வேண்டிய 1/2 பாகத்தை பிரித்து ஒப்படைக்க வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரியும், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையின்படி வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/2 பாகத்திற்கான இறுதிநிலை தீரப்பாணை வழங்க கோரியும் இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**4. <u>இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் 1ம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. அசல் வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை ஒருதலைபட்ச தீர்ப்பாக பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவருக்கு வாதி மற்றும் முதல் பிரதிவாதி தவிர வேறு வாரிசுகள் இல்லை என்று நிரூபிக்க வாதிக்கு கடமையுள்ளது. வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் வீதம் ஒருதலைப்பாளராக கிடைக்கக்கூடியது. 2ம் பிரதிவாதி பாகத்தில் 1/2 பாகம் கிடைக்கக்கூடியது என்று வாதி கோரியுள்ளது ஏற்கக்கூடியதல்ல. எனவே 1ம் எதிர்மனுதாரர் இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

**5. <u>விசாரணை நீதிமன்றத்தில் மனுவின் தீர்வுக்குரிய பிரச்சனை:</u>**

| | |
|---|---|
| 1. | மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? |

**<u>6. மனுவின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7.** விசாரணை நீதிமன்றம் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து, அசல் வழக்கு எண்.200/2008ல் இடைநிலை மனு எண்.997/2019–ல் 27.04.2022ம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:13 +0530

தேதியில் வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக மனுதாரர்/வாதி இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

8. **மேல்முறையீட்டு வழக்கிற்கான காரணிகளின் சுருக்கம்:**

விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை 14.10.2011 ல் ஏற்பட்டது என்பதையும், அதன் படி மேல்முறையீட்டாளருக்கு 1/3 பாகமும், எதிர்மேல்முறையீட்டளாருக்கு 1/3 பாகமும், இறந்து போன 2 ம் பிரதிவாதி தவமணிக்கு 1/3 பாகமும் உண்டு என்றும், அப்போது 2 ம் பிரதிவாதி உயிருடன் இருந்தார் என்பதும், 01.05.2016 ல் 2 ம் பிரதிவாதி தவமணி இறந்துவிட்டார் என்றும், அதன் காரணமாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தப் பிறகு பாகப்பிரிவினையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை சரியான கண்ணோட்டத்தில் அனுகாமல் மேல்முறையீட்டாளர் மனுவை தள்ளுபடி செய்திருப்பது தவறு. தவமணி முதல்நிலை தீர்ப்பாணைக்கு பிறகு இறந்துவிட்டதால் தவமணியின் 1/3 பாகத்தில் பாதி மனுதாரருக்கு அதாவது 1/6 பங்கு பாகத்தை மேல்முறையீட்டாளர் அடைந்துள்ளதால் இறுதிநிலை தீர்ப்பாணை மனு மேல்முறையீட்டாளருக்கு 1/6 பங்கு பாகம் உள்ளது என்ற அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை மனு போடப்பட்டுள்ளது என்பதை சரியான கண்ணோட்டத்தில் அனுகாமல் முதல்நிலை தீர்ப்பாணை திருத்த வேண்டுமென்ற அடிப்படையில் மனு தள்ளுபடி செய்திருப்பது தவறு. முதல் நிலை தீப்பாணை ஏற்பட்ட காலத்தில் தவமணி உயிருடன் இருந்ததால் முதல்நிலை தீர்ப்பாணையில் மாற்றம் எதுவுமில்லை என்ற சரியா கண்ணோட்டத்தில் அனுகவில்லை. 25.09.2013 ல் மேல்முறையீட்டளாரின் தாயார் செட்டில்மெண்ட் எழுதி வைத்திருப்பது உண்மையா, பொய்யா என்பதை முடிவு செய்யாமல் இறுதிநிலை தீர்ப்பாணை வழங்க இயலாது என்று கூறியிருப்பது சரியல்ல. எனவே இம்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டை அனுமதித்து சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.200/2008 ல் இடைநிலை மனு எண்.997/2019 ல் 27.04.2022 ம் தேதியில் வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்யக்கோரியுள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:18 +0530

9. **<u>இம் மேல்முறையீட்டு வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள்</u>**:

| | |
|---|---|
| 1. | மேல்முறையீட்டாளர்/ மனுதாரர்/வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/2 பங்கு பாகம் கிடைக்கக்கூடியது என்பது உண்மையா? |
| 2. | மேல்முறையீட்டாளர்/ மனுதாரர்/வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/2 பங்கு பாகத்திற்குரிய இறுதிநிலை தீர்ப்பாணை கிடைக்கக்கூடியதா? |
| 3. | சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.200/2008 ல் இடைநிலை மனு எண்.997/2019 ல் 27.04.2022 தேதியில் மனுவை தள்ளுபடி செய்து வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணை சரியானதா? |

10. இந்த மேல்முறையீட்டின் வசதிக்காக வழக்கு தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு குறிப்பிடப்படுகிறது.

11. மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் வழக்கு சொத்துக்களில் மேல்முறையீட்டாளர்/மனுதாரர் மற்றும் அவரது தாயார் இரண்டாம் மனுதாரர் மற்றும் சகோதரர் 1ம் மனுதாரர் ஆகியோருக்கு தலா 1/3 பாகம் வழங்கி 16.10.2011ம் தேதியில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு மேல்முறையீட்டாளரின் தாயார் இரண்டாம் மனுதாரர் தவமணி 01.05.2016 அன்று இறந்துவிட்டார் என்பதால் இரண்டாம் மனுதாரர்/2ம் பிரதிவாதியின் 1/3 பாகத்தில் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு தலா 1/2 பங்கு அதாவது 1/6 பாகம் கிடைக்கக்கூடியது என்பதால் மனுதாரர்/வாதிக்கு வழக்கு சொத்துக்களில் மொத்தம் 1/2 பங்கு பாகம் கோரி இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்ததாகவும், முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட காலத்தில் மனுதாரர்/வாதியின் தாயார் உயிருடன் இருந்தார் என்பதால் முதல்நிலை தீர்ப்பாணையை திருத்தம் செய்ய இயலாது என்றும், எனவே வழக்கு சொத்துக்களில் மனுதாரர்/வாதிக்கு 1/2 பங்கு பாகம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:23 +0530

உள்ளதால் விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்து தாவா சொத்துக்களில் மனுதாரர்/வாதியின் 1/2 பங்கு பாகம் குறித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரியுள்ளார்.

12. எதிர்மேல்முறையீட்டளார்/1ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்த பிறகு தரப்பினர்கள் யாரும் இறக்க நேரிட்டால் இறுதிநிலை தீர்ப்பாணை நடவடிக்கையில் உரிய பாகவீதத்திற்கு ஏற்ப முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், முதல் நிலை தீரப்பாணையை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்வது ஏற்புடையதல்ல என்றும், 1ம் எதிர்மனுதாரரின் தாயார் 25.09.2013 தேதியில் அவருடைய 1/3 பாகம் குறித்து 1ம் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், எனவே தாவா சொத்துக்களில் வாதி கோரியபடி 1/2 பங்கு பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்பதால் இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணையை உறுதி செய்யக்கோரியுள்ளார்.

**13. மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 மற்றும் 2– க்கான தீர்வு:**

மேல்முறையீட்டாளர்/மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், வாதிக்கு வழக்கு சொத்துக்களில் வாதியின் 1/3 பாகம் குறித்து விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து, வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் கிடைக்கக்கூடியது என்று 14.10.2011 அன்று பாகப்பிரிவினைக்காக முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு மனுதாரர்/வாதியின் தாயார் 2ம் பிரதிவாதி 01.05.2016 அன்று இறந்துவிட்டார் என்றும், எனவே இறந்துபோன 2ம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:28 +0530

பிரதிவாதிக்கு சேர வேண்டிய 1/3 பாகத்தில் மனுதாரருக்கும், முதல் எதிர்மனுதாரருக்கும் சரிபாதியாக 1/6 பாகம் கிடைக்கக்கூடியது என்றும், எனவே வாதிக்கு அவரது 1/3 பாகம் மற்றும் அவரது தாயார் 2ம் பிரதிவாதியின் பாகத்தில் 1/6 பாகம் சேர்த்து ஆக கூடுதல் வழக்கு சொத்துக்களில் 1/2 பங்கு பாகம் கிடைக்கக்கூடியது என்பதால் வாதிக்கு சேர வேண்டிய 1/2 பங்கு பாகத்தை பிரித்து ஒப்படைக்க வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரியும், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையின்படி வாதிக்கு வழக்கு சொத்துக்களில் வாதியின் 1/2 பங்கு பாகத்திற்கான இறுதிநிலை தீரப்பாணை வழங்க கோரியும் இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்துள்ளார்.

14. மனுதாரர் மனுவிற்கு முதல் எதிர்மனுதாரர்/ முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் அசல் வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், அவருக்கு வாதி மற்றும் முதல் பிரதிவாதி தவிர வேறு வாரிசுகள் இல்லை என்று நிரூபிக்க வாதிக்கு கடமையுள்ளது என்றும், வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் வீதம் ஒருதலைப்பாளராக கிடைக்கக்கூடியது என்றும், 2ம் பிரதிவாதி பாகமும் சேர்த்து வழக்கு சொத்துக்களில் 1/2 பங்கு பாகம் கிடைக்கக்கூடியது என்று வாதி கோரியுள்ளது ஏற்கக்கூடியதல்ல என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

15. இறுதிநிலை தீர்ப்பாணை மனுவின் மனுதாரர்/வாதி தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் எதுவுமில்லை. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் எதிர்மனுதாரர்/முதல் பிரதிவாதி எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ள எ.ம.சா.1ன் பரிசீலனையில் அசல் வழக்கில் முதல்நிலை

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:33 +0530

தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு 2ம் பிரதிவாதி முதல் பிரதிவாதிக்கு 25.09.2013 தேதியில் வழக்கு நான்கு அயிட்ட சொத்துக்களில் 2ம் பிரதிவாதியின் பிரிபடாத 1/3 பாகம் குறித்து தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ள விவரம் தெரியவருகிறது. மேலும் எம.சா.1 தம்முடைய சாட்சியத்தில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எ.ம.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணப்படியும், பட்டா படியும் சொத்தில் உரிமை கோருவதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

16. வழக்காவணங்களின் பரிசீலனையில் அசல் வழக்கு எண்.200/2008–ல் வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக இறுதிநிலை தீர்ப்பாணை இடைமனு எண்.997/2019 மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் முதல்நிலை தீர்ப்பாணைப்படி வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளது என்றும், தீர்ப்பாணைக்கு பிறகு வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் 2ம் பிரதிவாதி 01.05.2016ம் தேதியில் இறந்துவிட்டதால் மனுதாரரின் தாயாருக்கு வழக்கு சொத்துக்களில் உரிமையுள்ள பிரிபடாத 1/3 பாகத்தில் இரண்டாம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளான வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு தலா சரிபாதி அதாவது 1/6 பாகம் கிடைக்கக்கூடியது என்றும், ஆக மொத்தம் வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/2 பங்கு பாகம் குறித்து இறுதிநிலை தீரப்பாணை பிறப்பிக்கக்கோரியுள்ளார். இதற்கு முதல் எதிர்மனுதாரர்/முதல் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக முதல்நிலை தீர்ப்பாணை பெற்றுள்ளதாக எதிருரையில் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், முதல்நிலை தீர்ப்பாணையை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பது எ.ம.சா.1ன் சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எ.ம.சா.1 மூலமாக குறியீடு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:38 +0530

செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.1 ன் பரிசீலனையில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தாயாரான 2ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களில் அவருக்குண்டான 1/3 பாகம் குறித்து அவரது மகன் முதல் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும் தெரியவருகிறது. எ.ம.சா.1ன் மனுதாரர்/வாதி தரப்பு குறுக்கு விசாரணையில் செட்டில்மெண்ட் ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து கேள்வி எதுவும் எழுப்பப்படவில்லை. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து முதல்நிலை தீர்ப்பாணைப்படி வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் நிலையில், 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகம் குறித்து 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதால், வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் மட்டுமே கிடைக்கக்கூடியது என்று தீர்மானிக்கப்படுகிறது. அதே போல் 2ம் பிரதிவாதி பாகம் சேர்த்து வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 2/3 பாகம் கிடைக்கக்கூடியது என்பதால் வாதிக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகம் குறித்து மட்டுமே வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று தீர்மானித்து மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 மற்றும் 2க்கு தீர்வு காணப்படுகிறது.

**17. மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 3 –க்கான தீர்வு:**

மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 மற்றும் 2க்கான தீர்மானத்தின்படி வழக்கு சொத்துக்களில் வாதியின் 1/3 பாகத்திற்கு இறுதிநிலை தீர்ப்பாணை கிடைக்கக்கூடியது என்பதால் அசல் வழக்கு எண்.200/2008ல் இடைமனு எண்.997/2019 யை தள்ளுபடி செய்து 27.04.2022ம் தேதியில் சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்து இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் வாதியின் 1/3 பாகத்தை பொறுத்து நள இளப்பம் சரி கட்டி பிரிக்க ஏதுவாக வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து, அவரது அறிக்கையின் பேரில் வழக்கு சொத்துக்களில் வாதியின் 1/3 பாகத்திற்குரிய

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:43 +0530

இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க ஏதுவாக வழக்கு கோப்பை விசாரணை நீதிமன்றத்திற்கு மீட்டனுப்பலாம் என்று தீர்மானித்து மேல்முறையீட்டின் பிரச்சனை எண்.3 க்கு தீர்வு காணப்படுகிறது.

**18. முடிவாக,** இம்மேல்முறையீட்டு வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. அசல் வழக்கு எண்.200/2008 ல் இடைநிலை மனு எண்.997/2019 யை தள்ளுபடி செய்து 27.04.2022 ம் தேதியில் சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணை ரத்து செய்யப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் வழக்கு சொத்துக்களில் வாதியின் 1/3 பாகத்தை நள இளப்பம் சரி கட்டி பிரிக்க ஏதுவாக வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து, வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்டும் வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகத்திற்குரிய இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க ஏதுவாக வழக்கு கோப்பு சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மீட்டனுப்பப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 18:38:48 +0530

சார்பு நீதிபதி,

சீர்காழி.

**<u>நகல்:</u>**
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
சீர்காழி.

நேரிய/வரைவு தீரப்புரை
மேல்முறையீட்டுவழக்குஎண்.21/2024
நாள் –09.04.2026